**திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) செயல்முறைகள்**
**ஆணையிடுபவர்: திரு.இரா.வில்சன் இராசசேகர், B.A.,**

ந.க.அ3/1415/2021 நாள்:10.06.2021.

**பிலவ வருடம், வைகாசி -27 , திருவள்ளுவர் ஆண்டு 2052.**

பொருள்: பொதுப்பணி – தமிழ்நாடு அமைச்சு பணித்தொகுதி – திருப்பத்தூர் மாவட்ட வருவாய் அலகு - அலுவலக உதவியாளர் நிலையிலிருந்து தற்காலிகமாக இளநிலை வருவாய் ஆய்வாளராக பதவி உயர்வு வழங்கப்பட்டது – 2020-2021 ஆம் ஆண்டிற்கான காலிப்பணியிட மதிப்பீட்டறிக்கை அங்கீகரித்து வரப்பெற்றது – பணிவரண்முறை செய்து ஆணையிடுதல் - தொடர்பாக – பணிவரண்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

படிக்க:
1. திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) அவர்களின் செயல்முறைகள் மு.மு.எண்.அ3/3941/2020, நாள்:15.09.2020
2. கூடுதல் தலைமைச் செயலர்/வருவாய் நிருவாக ஆணையர் அவர்களின் கடித எண்.பணி 4(1)/10295/2020 நாள்:02.12.2020.

*******

**ஆணை:**

திருப்பத்தூர் மாவட்ட வருவாய் அலகில் அலுவலக உதவியாளர் நிலையிலிருந்து தற்காலிகமாக இளநிலை வருவாய் ஆய்வாளராக பதவி உயர்வு வழங்கி பார்வை 1-இல் கண்டுள்ள செயல்முறைகளில் ஆணையிடப்பட்ட கீழ்க்கண்ட 03 நபர்கள் கீழக்குறிப்பிட்ட அலுவலகங்களில் 16.09.2020 முற்பகல் முதல் பணியாற்றி வருகின்றனர்.

2) பார்வை 2-இல் கண்டுள்ள கடிதத்தில் 2020-2021 ஆம் ஆண்டிற்கான காலிப்பணியிட மதிப்பீட்டறிக்கையில் இளநிலை உதவியாளர் பணியிடத்தை பதவிஉயர்வு மூலம் நிரப்பிட 05 பணியிடங்கள் அங்கீகரிக்கப்பட்டமையால் கீழே குறிப்பிட்டுள்ள 03 இளநிலை வருவாய் ஆய்வாளர்களுக்கெதிரே குறிப்பிடப்பட்டுள்ள தேதி முதல் இவர்களது பணியினை தமிழ்நாடு அமைச்சுப்பணியில் இளநிலை உதவியாளர் பணியமைப்பில் வரண்முறை செய்தும், பணிவரண்முறை செய்த நாள் முதல் தகுதிகாண்பருவம் துவக்கியும், இவர்களது தகுதிகாண்பருவம் தொடர்ந்து 3 (மூன்று) ஆண்டு காலத்தில் இரண்டு ஆண்டு காலம் தகுதிகாண்பருவமாக நிர்ணயம் செய்தும் ஆணையிடப்படுகிறது.

| வ. எண் | இளநிலை வருவாய் ஆய்வாளர் பெயர் மற்றும் பணிபுரியும் அலுவலகம் திருவாளர்கள் | தமிழ்நாடு அமைச்சுப்பணியில் இளநிலை உதவியாளர் பணியமைப்பில் வரண்முறை செய்யப்பட்ட நாள் |
|---|---|---|
| 01. | திருமதி.சி.தெய்வானை, இளநிலை வருவாய் ஆய்வாளர், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகம், திருப்பத்தூர். | 16.09.2020 முற்பகல் |
| 02. | திருமதி.சி.விஜயலட்சுமி, இளநிலை வருவாய் ஆய்வாளர், வட்டாட்சியர் அலுவலகம், நாட்றம்பள்ளி. | 16.09.2020 முற்பகல் |
| 03. | திருமதி.இ.சங்கீதா, இளநிலை வருவாய் ஆய்வாளர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருப்பத்தூர். | 16.09.2020 முற்பகல் |

3) இந்த ஆணைகள் குறித்து சம்மந்தப்பட்டவர்களின் பணிப்பதிவேட்டில் தக்க பதிவுகள் மேற்கொள்ள தொடர்புடைய அலுவலர்கள் கோரப்படுகிறார்கள்.

**ஒம்/-இரா.வில்சன்இராசசேகர்**
மாவட்ட ஆட்சியரின்
நேர்முக உதவியாளர் (பொது)
திருப்பத்தூர்.

/உத்தரவுப்படி/

10/6/2021

அலுவலக மேலாளர் (பொது)

பெறுநர்
சம்மந்தப்பட்ட நபர்கள்

நகல்: மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர், திருப்பத்தூர்.
நகல்: வட்டாட்சியர், நாட்றம்பள்ளி

10/06/2021